



அபுதாபி, துபை, ஷார்ஜா மற்றும் ஏனைய ஐக்கிய அரபு அமீரக பள்ளிவாசல்களில் வெள்ளிக்கிழமை ஓதப்படும் ஜுமுஆ உரை

| | |
|---|---|
| வெளியீடு | ஐக்கிய அரபு அமீரக அரசின்<br>இஸ்லாமிய விவகார துறை<br>(http://www.awqaf.gov.ae) |

வெள்ளிக்கிழமை ஜுமாதியுல் அவ்வல் பிறை 24 ஹிஜ்ரி 1437

Friday of Jumada Al Awwal 24th Hijri 1437

4th March 2016

| | |
|---|---|
| தலைப்பு: | மிக அழகிய முறையில் தீமையை தடுங்கள்! |

| | |
|---|---|
| தமிழில் | மௌலவி, அப்சலுள் உலமா<br>புளியங்குடி செய்யிது அபூஸாலிஹ் பிலாலி B.Com., DUBAI.<br>Contact No. +971529919346 & Email : abusalih100@gmail.com<br>w w w . s u n n a t h w a l j a m a t h . c o m |

*இந்த உரையை ஒலி-ஒளி வடிவில் கேட்க +971 52 9919346 என்ற எண்ணிற்கு வாட்ஸ்அப்( ) மெசேஜ் அனுப்பவும். குரூப்பில் சேர விரும்பாதவர்களுக்கு தனித்தனியாக அனுப்பப்படும்.*

| தலைப்பு: | மிக அழகிய முறையில் தீமையை தடுங்கள்! |
|---|---|

எல்லாப் புகழும் அல்லாஹ்வுக்கே! அவன் தனித்தவனாகவும், நியாயமாகவும் இருக்கிறான். மிக அழகான முறையில் தீமையை எதிர்கொள்ள வேண்டும் என்று கட்டளையிடுகிறான். பரிசுத்த நாயனான அவனை உரிய முறையில் புகழ்கிறேன்.

மேலும் வணக்கத்திற்குரியவன் அல்லாஹ்வையன்றி வேறு யாருமில்லை. ஆட்சி அதிகாரங்கள் அவன் வசமே உள்ளன. அவனுக்கு யாதொரு இணையுமில்லை என்று நான் சாட்சி கூறுகிறேன். வல்ல இறைவனின் நேசராக திகழும் எங்கள் தலைவர், படைப்புகளில் மிகச் சிறந்த எங்கள் திருநபி முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அல்லாஹ்வின் அடியாராகவும், தூதராகவும் இருக்கிறார்கள் என்று நான் சாட்சி கூறுகிறேன். அனைத்து நற்குணங்களையும் ஒருங்கே பெற்றிருந்தார்கள். மறுமை நாளில் இறைவனிடம் பரிந்துரை செய்யும் சிறப்பியல்புகளை பெற்றவர்கள்.

யா அல்லாஹ்! எங்கள் தலைவர் நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் மீதும், அவர்களின் புனிதமிக்க குடும்பத்தினரின் மீதும், தியாகம் நிறைந்த தோழர்கள் அனைவர் மீதும், உலக முடிவு நாள் வரை அழகிய முறையில் அந்த தோழர்களை பின்பற்றி நடக்கும் முஸ்லிம்கள் மீதும் இறைவா நீ ஸலவாத்தும் ஸலாமும் பொழிந்திடுவாயாக!!!

**கவனமாக கேளுங்கள்**! இறைவனுக்கு அஞ்சி நடப்பதை எனக்கும் உங்களுக்கும் உபதேசிக்கிறேன். அவனுக்கே கட்டுப்பட்டு நடக்க வேண்டும். அவனுக்கு அஞ்ச வேண்டிய முறையில் அஞ்சி நடங்கள்.

வல்ல அல்லாஹ் தனது திருமறையில் கூறுகிறான்:(2:281)

وَاتَّقُوا يَوْماً تُرْجَعُونَ فِيهِ إِلَى اللَّهِ ثُمَّ تُوَفَّى كُلُّ نَفْسٍ مَّا كَسَبَتْ وَهُمْ لاَ يُظْلَمُونَ

“மேலும், ஒரு நாளை பற்றிப் பயப்படுங்கள். அந்நாளில் நீங்கள் (அனைவரும்) அல்லாஹ்விடம் கொண்டு வரப்படுவீர்கள். ஒவ்வொரு ஆத்மாவுக்கும் அவைகள் செய்த செயல்களுக்கு முழுமையாகக் (கூலி) கொடுக்கப்படும். அன்றி, அவர்கள் அநியாயம் செய்யப்பட மாட்டார்கள்”

**முஸ்லிம்களே**! எல்லாம் வல்ல ஏக இறைவன் கூறுகிறான்: (41:34-35)

وَلاَ تَسْتَوِي الْحَسَنَةُ وَلاَ السَّيِّئَةُ ادْفَعْ بِالَّتِي هِيَ أَحْسَنُ فَإِذَا الَّذِي بَيْنَكَ وَبَيْنَهُ عَدَاوَةٌ كَأَنَّهُ وَلِيٌّ حَمِيمٌ* وَمَا يُلَقَّاهَا إِلاَّ الَّذِينَ صَبَرُوا وَمَا يُلَقَّاهَا إِلاَّ ذُو حَظٍّ عَظِيمٍ

“நன்மையும் தீமையும் சமமாகிவிடாது. (ஆதலால், நபியே! தீமையை) நீங்கள் மிக அழகியதைக் கொண்டு தடுத்துக் கொள்ளுங்கள். அவ்வாறாயின், உங்களுடைய கொடிய எதிரியை அதே சமயத்தில் உங்களுடைய உண்மையான, மிக்க நெருங்கிய நண்பனைப் போல் காண்பீர்கள். பொறுமையுடையவர்களைத் தவிர மற்றெவரும் இதனை அடைய மாட்டார்கள். அன்றி, பெரும் பாக்கியமுடையவர்களைத் தவிர மற்றெவரும் இதனை அடையமாட்டார்கள்”

அடுத்தவர்களுக்கு நன்மை செய்தல் அல்லது தீமை செய்தலின் மாபெரும் வேறுபாடை மேல்கூறிய வசனம் மிக தெளிவாக கூறுகிறது. ஒரு முறை ஹஜ்ரத் உமர் இப்னு கத்தாப் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் கூறினார்கள்: “ஒருவன் உன்னுடைய உரிமையில் அல்லாஹ்விற்கு மாறாக செயல்பட்டிருந்தால் அதற்கு ஈடாக அல்லாஹ்வின் வழியில் நீ அவனுக்கு நன்மை செய்ய வேண்டும். காரணம் உனக்கு கெடுதல் செய்தவனுக்கு நீ நன்மை செய்யும்போது, உனது அணுகுமுறையால் அவனுடைய அன்பையும், பாசத்தையும் பெற முடியும். நெருக்கமான உறவும் ஏற்படும். இதன் உச்சபட்சமாக அவன் உனக்கு நெருங்கிய நண்பனாகிவிடுவான். கோபத்தை அடக்கிக் கொண்டு, பொறுமையாக இருப்பவனால் மட்டுமே இவ்வாறு நடந்து கொள்ள முடியும். மற்றவர்களால் ஏற்படும் பாதிப்புகளையும் பொறுத்துக் கொள்ள முடியும். இவ்வுலகிலும், மறுஉலகிலும் மிகவும் ஈடேற்றமான வாழ்வையும், அதிகமான நன்மைகளையும் பெற முடியும்” ((181/7) تفسير ابن كثير:)

இவ்வாறு நடந்து கொள்ளும் பண்பை பெற்றவர் எச்சூழலிலும் தீமையை நன்மையாக மாற்றிவிடும் திறமையை பெற்றிருப்பார். ஆழ்ந்த அறிவுத்திறனும், தொலைநோக்கு சிந்தனையும், பணிவான போக்கும் அவரிடம் இருக்கும். எல்லாம் வல்ல அல்லாஹ் கூறுகிறான்: (13:22)

وَيَدْرَءُونَ بِالْحَسَنَةِ السَّيِّئَةَ أُوْلَئِكَ لَهُمْ عُقْبَى الدَّارِ

“நன்மையைக் (கைக்) கொண்டே தீமையைத் தவிர்த்து விடுவார்கள். இத்தகையவர்களுக்கு (மறுமையில்) நல்ல முடிவு உண்டு. (அதாவது நிலையான சுவனபதி கூலியாகக் கிடைக்கும்.)”

கட்டுக்கடங்காத கோபத்தை அடக்கிவிட்டு அமைதியான மனநிலையில் யார் இருக்க பழகிக்கொள்கிறாரோ நிச்சயம் அவருக்கு நதிகள் ஓடும் சுவனபதி கிடைக்கும். இத்தகைய மனிதர் கண்ணியமான வார்த்தைகளை மட்டுமே பேசுவார். தன்னை தாக்கியவருக்கும் உதவி செய்ய முன்வருவார். வாய்ப்பு கிடைத்துவிட்டால் கெடுதல் செய்தவருக்கும் நன்மை செய்ய முற்படுவார். நேர்மறையான செயல்களில் மட்டுமே ஈடுபடுவார். உண்மையான ஒரு முஃமீனுடைய குணாதிசயங்களையும், இறையச்சம் கொண்டவர்களின் பண்பாடுகளையும் தமது அணுகுமுறைகளில் வெளிப்படுத்துவார். அல்லாஹ் இவ்வாறான மனிதர்களை பற்றி பின்வருமாறு தன் வேதத்தில் கூறுகிறான்: (25:63)

وإِذَا خَاطَبَهُمُ الْجَاهِلُونَ قَالُوا سَلاماً

“இவர்கள்தாம், ரஹ்மானுடைய அடியார்கள்: பூமியில் (அடக்கமாகவும்) பணிவாகவும் நடப்பார்கள். மூடர்கள் அவர்களுடன் தர்க்கிக்க முற்பட்டால் "ஸலாமுன்" என்று கூறி (அவர்களை விட்டு விலகி) விடுவார்கள்”

அதாவது, அறிவற்ற மடையர்களால் எந்த வகையில் பாதிக்கப்பட்டிருந்தாலும் அதற்கு ஈடாக அவர்களை தாக்கும் போக்கை இவர்கள் கடைபிடிக்க மாட்டார்கள். அதற்கு நேர்மாறாக அவர்களை பெருந்தன்மையோடு மன்னித்து விடுவார்கள். விட்டுக்கொடுப்பார்கள். நன்மையான வார்த்தைகளை மட்டுமே பேசுவார்கள். (122/6 : تفسير ابن كثير)

இதனை குறித்து ஒரு கவிஞர் பின்வருமாறு கூறுகிறார்:

وَإِنْ بُلِيتَ بِشَخْصٍ لاَ خَلاَقَ لَهُ فَكُنْ كَأَنَّكَ لَمْ تَسْمَعْ وَلَمْ يَقُلِ

"ஒரு மனிதனால் நீ பாதிக்கப்பட்டிருந்தால் அவனுக்கு எந்த நாகரீக குணமும் இல்லை என்பதாகும். எனவே நீ எதையும் காதால் கேட்காததை போன்றும், அவன் எதுவும் பேசாமல் இருந்ததை போன்றும் நீ இருந்துவிடு"

**தொழுகையாளிகளே!** யாரேனும் கெடுதல் செய்தாலும் அவருக்கு நன்மை செய்ய வேண்டும் என்கிற உயரிய பண்பை நபிகள் நாயகம் ரஸூலே கரீம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கற்றுக் கொடுத்துள்ளார்கள். மனிதர்களிடம் பழகும்போது சொல்லாலும் செயலாலும் கண்ணியமான முறையில் நடந்து கொள்ள வேண்டும். நபிகள் நாயகம் ரஸூலே கரீம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் குணாதிசயங்களைப் பற்றி அன்னை ஆயிஷா ரலியல்லாஹு அன்ஹா அவர்களிடம் ஒரு முறை கேட்கப்பட்டது. அப்போது அவர்கள்:

لَمْ يَكُنْ فَاحِشًا وَلاَ مُتَفَحِّشًا، وَلاَ صَخَّابًا فِي الأَسْوَاقِ، وَلاَ يَجْزِي بِالسَّيِّئَةِ السَّيِّئَةَ، وَلَكِنْ يَعْفُو وَيَصْفَحُ

"கண்மணி நாயகம் ரஸூலே கரீம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் தரக்குறைவான வார்த்தைகளை பேச மாட்டார்கள், அருவருப்பான முறையில் பேச மாட்டார்கள். கடைவீதிகளில் நாகரீகமற்ற முறையில் (சத்தமாக) பேச மாட்டார்கள். கெடுதல் செய்பவருக்கு கெடுதல் செய்யமாட்டார்கள். ஆனால் அவ்வாறு கெடுதல் செய்பவர்களை பெருந்தன்மையோடு விட்டுக் கொடுத்து மன்னித்து விடுவார்கள்" என்று கூறினார்கள். (الترمذي : 2016)

கெடுதல் செய்தவருக்கு நன்மை செய்வது மிகவும் சிறந்த செயல் என்று நபிகள் நாயகம் ரஸூலே கரீம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் தெளிவு படுத்தியுள்ளார்கள். ஒரு முறை உக்பத் இப்னு ஆமிர் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள், "அல்லாஹ்வின் தூதரே! நற்காரியங்களில் மிகவும் சிறந்த நற்காரியத்தை எனக்கு நீங்கள் அறிவித்து கொடுங்கள்" என்று கண்மணி நாயகம் ரஸூலே கரீம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களிடம் வேண்டுகோள் வைத்தார். அதற்கு அவர்கள்,

يَا عُقْبَةُ صِلْ مَنْ قَطَعَكَ، وَأَعْطِ مَنْ حَرَمَكَ، وَأَعْرِضْ عَمَّنْ ظَلَمَكَ

"உக்பாவே! உன்னை துண்டித்து வாழ்பவரோடு நீ சேர்ந்து வாழ், உன்னை வேண்டாம் என்று ஒதுங்கி வாழ்பவருக்கு நீ கொடுத்து வாழ், உனக்கு அநியாயம் செய்தவரை நீ கண்டுகொள்ளாமல் விட்டுவிடு" (أحمد : 17797)

தனக்கு தீங்கு செய்தவனை ஒருவன் மன்னித்து விடுவது மிகவும் உயரிய நாற்குணமாகும். எதிர் தாக்குதல் செய்வதற்கான எந்த காரணியையும் அவன் கவனத்தில் கொள்ளக் கூடாது. நன்மையை மட்டுமே எதிர் நோக்கி வாழும் பண்பை வளர்த்துக்கொள்ள வேண்டும். தீங்கு

செய்தவனுக்கு நல்லது செய்ய முயல வேண்டும். மற்ற தீங்கிலிருந்து அவனை காக்க வேண்டும். பொதுக் காரியத்திலும், தனிப்பட்ட முறையிலும் அவனிடம் பாசத்தோடு பழக வேண்டும். தன்னை விட்டு ஒதுங்கி வாழ்பவனோடு சேர்ந்து வாழ முயல வேண்டும். தனக்கு ஏதேனும் ஒரு வகையில் அநியாயம் செய்துவிட்டாலும் அவனை தாக்காமல் மிகவும் பொறுமையாக இருக்க வேண்டும். தனக்கு பிறகு இப்படித்தான் வாழ வேண்டும் என்று நபிகள் நாயகம் ரஸூலே கரீம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அறிவுரை கூறியுள்ளார்கள்:

مَنْ وَلِيَ شَيْئًا مِنْ أُمَّةِ مُحَمَّدٍ صلّى الله عليه و سلّم ... فَلْيَقْبَلْ مِنْ مُحْسِنِهِمْ، وَيَتَجَاوَزْ عَنْ مُسِيِّهِمْ

“முஹம்மதுடைய சமுதாயத்தவர்களில் பொறுப்புக்கு வருகிறவர் யாருக்காவது நன்மையோ, தீமையோ செய்ய சக்தி பெற்றால் நல்லவர்களிடமிருந்து (நல்லவதை) ஏற்று அவர்களில் கெட்டவர்களை அலட்சியம் செய்து விடவும்” (927 : البخاري)

தீங்கு செய்தவர்களை பெருந்தன்மையோடு மன்னித்து விடும் பண்பை இந்த ஹதீஸில் காண முடியும். பரிசுத்த நாயனாகிய அல்லாஹ் கூறுகிறான்: (42:40)

وَجَزَاءُ سَيِّئَةٍ سَيِّئَةٌ مِثْلُهَا فَمَنْ عَفَا وَأَصْلَحَ فَأَجْرُهُ عَلَى اللَّهِ

“தீமைக்குக் கூலியாக அதைப்போன்ற தீமையையே செய்வார்கள். (அதற்கு அதிகமாக அல்ல.) எவரேனும் (பிறரின் அநியாயத்தை) மன்னித்து, அவருடன் சமாதானம் செய்து கொண்டால், அவருடைய கூலி அல்லாஹ்வின் மீது (கடமையாக) இருக்கின்றது”

அதாவது, அதற்குரிய கூலி அல்லாஹ்விடம் இருக்கிறது, நிச்சயம் அவை வீணாகிவிடுவதில்லை. ((212/7) :تفسير ابن كثير)

அவ்வாறு நடந்து கொள்பவர்களுக்கு இறைவன் பல நன்மைகளை வழங்குகிறான். அவர்களை புகழ்ந்து கூறுகிறான், அவர்களை தூய்மைப்படுத்துகிறான், அவர்கள் மீது தனது பாசத்தை வெளிப்படுத்துகிறான். அவர்களை முழுவதுமாக பொருந்திக் கொள்கிறான். எல்லாம் வல்ல ஏக இறைவன் கூறுகிறான்: (3:134)

وَالْكَاظِمِينَ الْغَيْظَ وَالْعَافِينَ عَنِ النَّاسِ وَاللَّهُ يُحِبُّ الْمُحْسِنِينَ

“கோபத்தை விழுங்கி விடுவார்கள். மனிதர்(களின் குற்றங்)களை மன்னித்து விடுவார்கள். அல்லாஹ் (இத்தகைய) அழகிய குணமுடையவர்களை நேசிக்கின்றான்”

அதாவது, கடுமையான கோபம் ஏற்பட்டாலும் அவற்றை முழுவதுமாக மறைத்து விடுவார்கள், பாதிப்பு ஏற்படுத்தியவர்களை பரிபூரணமாக மன்னித்து விடுவார்கள். யார் மீதும் குரோத உணர்வை கொண்டிருக்க மாட்டார்கள். யார் மீதும் எந்தவித பொறாமையும், காழ்புணர்ச்சியும், மனக்கசப்பும் கொள்ள மாட்டார்கள். எல்லா நிலையிலும் இந்த அணுகுமுறையை கடைபிடிப்பார்கள். காரணம் இவ்வாறு கருத்து வேறுபாடு ஏற்படும் போது கோபம் கொள்ளாமல்,

மிகவும் நிதானமாக செயல்பட்டால் மற்றவர்களின் பாசத்தையும், அன்பையும் பெறலாம். பகையுணர்வை மறந்து பாசத்துடன் வாழலாம்.

ஒரு முறை அலி இப்னுல் ஹுஸைன் ஜைனுல்லாபுதீன் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் வெளியில் சென்று கொண்டிருந்தார்கள். அவர்களை ஒருவன் தரக்குறைவான வார்த்தைகளால் ஏசினான். உடனே இவர்கள் அந்த மனிதனை நெருங்கிச் சென்று, "நம்மைப் பற்றி உனக்கு அதிகம் தெரிந்திருக்கிறதே" என்று சொன்னார்கள். பிறகு, "உனக்கு ஏதேனும் உதவி வேண்டுமா?" என்று கேட்டார்கள். அந்த மனிதன் வெட்கத்தால் கூனி குறுகினான். அப்போது இமாம் அவர்கள் தன்னுடைய மேலாடையை அவனுக்கு போர்த்தினார்கள். மேலும் அவனுக்கு ஆயிரம் திர்ஹம்களை வழங்கினார்கள். பிறகு அந்த மனிதன் திரும்பி செல்லும்போது இந்த இமாமை கண்ணியமான வார்த்தைகளால் புகழ்ந்து கொண்டே சென்றான். ( شرح البخاري للسفيري : (386/1) وهو علي بن الحسين زين العابدين)

ஒரு மனிதன் தன்னுடைய நெருக்கமான உறவினரை திட்டிக்கொண்டிருந்தான். அதற்கு அந்த உறவினர், "நீ பேசுவது உண்மையாக இருந்தால் கண்டிப்பாக அல்லாஹ் என்னை மன்னிப்பானாக! நீ பேசுவது பொய்யாக இருந்தால் கண்டிப்பாக அல்லாஹ் உன்னை மன்னிப்பானாக!!" என்று நிதானமாக பதில் கூறினார். ((397/4) : سير أعلام النبلاء)

உறுதியான நல்ல குணங்களையும், அழகிய நடைமுறைகளையும் கொண்டிருந்தால் நிச்சயம் வாழ்வில் ஏற்றம் பெறலாம். இவ்விரண்டும் இருந்தால் ஒரு மனிதனின் கௌரவமும் கண்ணியமும் உயரும். பண்பட்ட மன நிலையை பெற முடியும். பின்வரும் இறைவசனத்தை பின்பற்றிய பாக்கியம் கிடைக்கும்: (23:96)

ادْفَعْ بِالَّتِي هِيَ أَحْسَنُ السَّيِّئَةَ

"(நபியே!) தீமையை மிக அழகியதைக் கொண்டே நீங்கள் தடுத்துக் கொள்ளுங்கள்"

அனைத்து உயிரினங்கள் மீதும் கருணையோடு நடந்து கொள்ள வேண்டும், நெருக்கமானவர்கள், தெரியாதவர்கள், பழக்கமானவர்கள், பழக்கமில்லாதவர்கள் என அனைவரிடமும் பாசத்தோடு நடக்க வேண்டும். பகை உணர்வையும், காழ்ப்புணர்ச்சியையும் விட்டொழிக்க வேண்டும். நல்ல நோக்கங்களை மட்டுமே நிறைவேற்ற வேண்டும். யாரையும் நேரடியாகவோ, மறைமுகமாகவோ புண்படுத்தும் விதமாக செயல்படக்கூடாது. இப்படி செய்வதால் அனைவரும் பாசத்தோடும், அக்கறையோடும் வாழ முடியும். இறைவனின் சொர்க்கத்தை பெற்று மறுமை நாளில் வெற்றி பெற முடியும்.

நாங்கள் ஒருமுறை கண்மணி நாயகம் ரஸூலே கரீம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களோடு அமர்ந்திருந்தோம். அப்போது கண்மணி நாயகம் ரஸூலே கரீம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள்:

يَطْلُعُ عَلَيْكُمُ الآنَ رَجُلٌ مِنْ أَهْلِ الْجَنَّةِ

“சுவனத்தை சேர்ந்த ஒரு மனிதர் இப்போது உங்கள் முன்னிலையில் வருவார்” என்று கூறினார்கள். அப்போது அங்கே ஓர் அன்ஸாரி சஹாபி வந்து நின்றார். சபை முடிந்ததும் நபிகள் நாயகம் ரஸூலே கரீம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அங்கிருந்து எழுந்து சென்று விட்டார்கள். ஆனால் அப்துல்லாஹ் இப்னு அம்ர் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் அந்த அன்சாரி சஹாபியை பின்தொடர்ந்து சென்றார்கள். அந்த சஹாபியோடு மூன்று நாட்கள் தங்கினார்கள். அவர்கள் கண்ணுக்கு புதுமையாக எதுவுமே புலப்படவில்லை.

எனவே நேரடியாகவே அந்த சஹாபியை பார்த்து, “தோழரே! *‘சுவனத்தை சேர்ந்த ஒரு மனிதர் இப்போது உங்கள் முன்னிலையில் வருவார்’* என்று நபிகள் நாயகம் ரஸூலே கரீம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் மூன்று முறை கூறியிருக்கிறார்கள். அந்த மூன்று முறையும் தாங்கள்தான் சபைக்கு வந்தீர்கள். எனவே தங்களுடைய சிறப்பான வணக்கங்களை அறிந்து கொள்ள ஆசைப்பட்டேன். ஆனால் நீங்கள் தனிச்சிறப்பு வாய்ந்த வணக்கங்கள் எதுவும் செய்வதாக நான் காணவில்லையே! பிறகு எப்படி கண்மணி நாயகம் ரஸூலே கரீம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் உமக்கு அவ்வாறு நற்சான்றிதழ் வழங்கினார்கள்?” என்று கேட்டார்கள். அதற்கு அந்த சஹாபி, “நீங்கள் என்னில் எதைக் கண்டீர்களோ அந்த அளவிலேயே நான் இருக்கிறேன், என்றாலும் எந்த ஒரு முஸ்லிமையும் என் மனதில் நான் தவறாக நினைப்பதில்லை அதேசமயம் மிகச் சிறப்பான பாக்கியங்களை யாருக்கேனும் அல்லாஹ் வழங்கியிருந்தால் அதனைக் கண்டு நான் பொறாமைப்படுவதில்லை” என்று கூறினார்கள். (17915 : أحمد)

யா அல்லாஹ்! அனைவரையும் நேசிக்கும் பண்பை எங்களுக்கு நீ தருவாயாக!! எங்களுக்கிடையில் ஒற்றுமையை ஏற்படுத்துவாயாக!!! எங்கள் உள்ளத்திலிருந்து ஷைத்தானின் சூழ்ச்சி வலையை அகற்றிவிடுவாயாக!!!

**கவனமாக கேளுங்கள்**: இறைவனுக்கு அஞ்சி நடக்க வேண்டும், நபிகள் நாயகம் ரஸூலே கரீம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் வழிமுறைகளை பின்பற்றி வாழ வேண்டும் என்பதே நாம் ஒருவருக்கொருவர் செய்யும் அறிவுரையாக இருக்கிறது.

**தொழுகையாளிகளே**! யாரேனும் கெடுதல் செய்தால் அதற்கு ஈடாக நாம் அவருக்கு நன்மை மட்டுமே செய்ய வேண்டும். இப்னு அப்பாஸ் ரலியல்லாஹு அன்ஹுமா அவர்கள் கூறுகிறார்கள், “உம்மைப் பற்றி தெரியாமல் உம்மிடம் தவறாக நடப்பவனின் அறியாமையை உம்முடைய சகிப்புத்தன்மையால் நீ புறக்கணித்து வென்றுவிடு” ((361/15) : تفسير القرطبي)

இது மிகவும் உன்னதமான நற்குணமாகும். இதனால் கண்ணியம் உயரும், எண்ணற்ற பல பயன்கள் கிடைக்கும், பல முன்னேற்றங்களும், நல்ல விளைவுகளும் ஏற்படும், அளவற்ற அருளாலனை பின்பற்றிய நன்மை கிடைக்கும், ஷைத்தானுக்கு மாறு செய்த பலனும் கிடைக்கும். ஆம் இந்த ஷைத்தான்தான் கருத்து வேற்றுமையை உருவாக்கி அதன்மூலம் மனித உள்ளங்களில் மனக்கசப்பையும், காழ்ப்புணர்ச்சியையும், பகை உணர்வையும் வளர்க்கிறான்.

எல்லாம் வல்ல அல்லாஹ் கூறுகிறான்: (17:53)

وَقُلْ لِعِبَادِي يَقُولُوا الَّتِي هِيَ أَحْسَنُ إِنَّ الشَّيْطَانَ يَنْزَغُ بَيْنَهُمْ إِنَّ الشَّيْطَانَ كَانَ لِلْإِنْسَانِ عَدُوًّا مُبِينًا

"(நபியே! எனக்கு கட்டுப்பட்ட) என்னுடைய அடியார்களுக்கு நீங்கள் கூறுங்கள்: அவர்கள் (எந்த மனிதருடன் பேசியபோதிலும்) எது மிக அழகியதோ அதையே கூறவும். நிச்சயமாக ஷைத்தான் அவர்களுக்கிடையில் (கெட்ட வார்த்தைகளைக் கூறும்படி செய்து) கெடுதலே செய்வான். (ஏனென்றால்,) நிச்சயமாக ஷைத்தான் மனிதனுக்குப் பகிரங்கமான எதிரியாக இருக்கிறான். (ஆகவே, எச்சரிக்கையாக இருந்து கொள்ளுங்கள்.)"

தமக்கு ஏற்பட்ட கெடுதலுக்கு ஈடாக நன்மை செய்யும்போது சமூக ஒற்றுமை காக்கப்படுகிறது, தொடர்புகள் பலப்படுகிறது, கண்ணியமான நட்புறவு ஏற்படுகிறது. இதனால் சமூகத்தில் ஒவ்வொரு தனிமனிதனும் மிக நிம்மதியாகவும் அமைதியாகவும் வாழ முடிகிறது. ஒருவர் இப்படி பெருந்தன்மையோடு நடந்து கொள்ளும்போது அவரை பற்றிய நன்மதிப்பை மனித உள்ளங்களில் இறைவன் விதைக்கிறான். அந்த மனிதர்கள் அவர் மீது உண்மையான பாசமும் அக்கறையும் கொண்டிருப்பார்கள். பொது மக்கள் அவர் மீது தனிப்பட்ட ஒரு மரியாதையும், கௌரவமும் வைத்திருப்பார்கள். அந்த மனிதர் மற்றவர்களிடம் விட்டுக்கொடுத்து மிக பணிவாக நடப்பதால் மேலும் மேலும் அவருடைய கண்ணியத்தை அல்லாஹ் உயர்த்திக்கொண்டிருக்கிறான். கண்மணி நாயகம் ரஸூலே கரீம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறுகிறார்கள்:

مَا زَادَ اللَّهُ عَبْدًا بِعَفْوٍ إِلاَّ عِزًّا، وَمَا تَوَاضَعَ أَحَدٌ لِلَّهِ إِلاَّ رَفَعَهُ اللَّهُ

"மன்னிப்பதால் ஓர் அடியாருக்கு அல்லாஹ் கண்ணியத்தையே அதிகப்படுத்துகிறான். அல்லாஹ்வுக்காக ஒருவர் பணிவு காட்டினால் அவரை அல்லாஹ் கண்டிப்பாக உயர்த்தாமல் இருப்பதில்லை" (2588 : مسلم)

நம்மில் பெரும்பான்மையானவர்கள் தன்னளவில் மட்டுமே சிந்திக்கிறோம். எனவே சுயநல போக்கில் பிறர் மீது குற்றம் சுமத்துகிறோம். பொதுக் கண்ணோட்டத்தில் அணுகும்போதுதான் பரந்த மனப்பான்மையோடு மன்னிக்கும் மனநிலை வளரும். இதனை தொடர்ந்து கடைப்பிடித்து வரும்போது விட்டுக்கொடுப்பது நமக்கு சுமையாகவோ பெரும் இழப்பாகவோ இருக்காது. மனிதர்களுக்கு நன்மை ஏற்படுத்தும் நோக்கிலும், சமூகத்தில் பொது அமைதியை காக்கும் நோக்கிலும் நம்முடைய அணுகுமுறை அமைந்திருக்க வேண்டும். எனவே விட்டுக்கொடுத்து வாழ்வதால் நிச்சயம் நாம் கெட்டுப்போய்விட மாட்டோம் என்பதை உணர்ந்து கொள்ள வேண்டும்.

யா அல்லாஹ்! உனக்கும், உனது தூதர் முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹீ வஸல்லம் அவர்களுக்கும், நீ யாரையெல்லாம் பின்பற்றி நடக்க சொன்னாயோ அவர்களுக்கும் நாங்கள் முழுமையாக வழிபடுவதற்கு எங்கள் அனைவருக்கும் உதவி புரிவாயாக!!

அல்லாஹ் தனது திருமறையில் கூறுகிறான் : (4:59)


www.sunnathwaljamath.com

يَا أَيُّهَا الَّذِينَ آمَنُوا أَطِيعُوا اللَّهَ وَأَطِيعُوا الرَّسُولَ وَأُوْلِي الأَمْرِ مِنكُم

“ஈமான்கொண்ட நல்லடியார்களே ! அல்லாஹ்வுக்கு கீழ்படியுங்கள்; இன்னும் (அல்லாஹ்வின்) தூதருக்கும், உங்களில் (நேர்மையாக) அதிகாரம் வகிப்பவர்களுக்கும் கீழ்படியுங்கள்”

யார் மீது ஸலவாத் சொல்ல வேண்டும் என்று நமக்கு கட்டளை இடப்படிருக்கிறதோ அவர்கள் மீது நம் அனைவரும் ஸலவாத் ஓதிக் கொண்டே இருப்போம்:

مَنْ صَلَّى عَلَيَّ صَلاَةً صَلَّى اللَّهُ عَلَيْهِ بِهَا عَشْراً

இறைதூதர் கண்மணி நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறுகிறார்கள்: "யார் என் மீது ஒரு முறை ஸலவாத் சொல்லுகிறார்களோ அவர் மீது அல்லாஹ் பத்து முறை ஸலவாத் சொல்லுகிறான்" (முஸ்லிம் : 384 )

"யா அல்லாஹ் ! எங்கள் தலைவரும், எங்கள் நபியுமாகிய முஹம்மது நபி ஸல்லல்லாஹுஅலைஹீ வஸல்லம் அவர்கள் மீதும், புனிதமிக்க அவர்களின் குடும்பத்தினரின் மீதும், தியாகம் நிறைந்த அவர்களின் தோழர்கள் மீதும் ஸலவாத் என்னும் ஈடேற்றத்தையும் ஸலாம் என்னும் அமைதியையும், பரகத் என்னும் நற்பாக்கியங்களையும் தந்தருள்வாயாக!, மேலும் நல்வழி காட்டும் கலிபாக்களாகிய அபூபக்ர், உமர், உஸ்மான், அலி ரலியல்லாஹு அன்ஹும் ஆகியோர்களையும், சங்கை நிறைந்த அனைத்து தோழர்களையும், அவர்களை தொடர்ந்து வந்த தாபியீன்களையும், உலக முடிவு நாள் வரை இவர்களை அழகிய முறையில் பின்பற்றி நடக்கும் முஸ்லிம்களாகிய எங்கள் அனைவரையும் நீ பொருந்திக்கொள்வாயாக.!!!
யா அல்லாஹ் போர்களில் உயிர்த்தியாகம் செய்த நம் தேசத்தின் இராணுவ வீரர்களுக்கு நீ கருணை காட்டுவாயாக! அவர்களுக்கு ஈடேற்றமான தங்குமிடத்தை வழங்குவாயாக, கண்ணியம் நிறைந்தவனே, மன்னிக்ககூடியவனே அந்த வீரர்களின் மதிப்பை நீ உயர்திடுவாயாக, நபிமார்கள் மற்றும் ஸித்தீகீன்களோடு அவர்களை வைப்பாயாக!!

வீரர்களின் தாய்மார்களுக்கும், தந்தைமார்களுக்கும், மனைவிமார்களுக்கும், குடும்ப உறுப்பினர்களுக்கும் நீ அதிகமான நன்மைகளை வழங்கிடுவாயாக, யா அல்லாஹ் அரேபிய கூட்டுப்படைக்கு நீ வலுவான ஆற்றலை வழங்கிடுவாயாக! அவர்களுக்கு உறுதுணையாக இருப்பாயாக!! யா அல்லாஹ்! ஏமன் தேசத்து மக்களுக்கு நீ உதவி புரிவாயாக! அவர்கள் அனைவரையும் ஒரே ஷரீஅத்தின் கீழ், உண்மையின் ஒரே வார்த்தையின் கீழ் ஒன்று சேர்ப்பாயாக!! அவர்களுக்கு எண்ணற்ற வகையில் நீ கருணை காட்டுவாயாக!!! சங்கையானவர்களுக்கெல்லாம் சங்கையானவனே அவர்களுக்கு மிக அமைதியான நிலையான ஆட்சியை வழங்கிடுவாயாக!!!

**யா அல்லாஹ்! மறைவாகவும் பகிரங்கமாகவும் நடக்கும் குழப்பத்திலிருந்து இந்த அமீரக தேசத்தை பாதுகாப்பாயாக!! அனைத்து இஸ்லாமிய தேசங்களிலும் அமைதியையும் பாதுகாப்பையும் நிலை படுத்துவாயாக!!! (இந்த துஆவை இமாம் இரண்டு முறை ஓத வேண்டும்)**

யா அல்லாஹ்! எங்கள் நோன்பையும், தொழுகையையும் ஏற்றுக் கொள்வாயாக!! நாங்கள் உன்னிடம் சொர்கத்தை கேட்கிறோம், சொல்லாலும் செயலாலும் அந்த சொர்கத்தின் பக்கம் நெருங்கும் பாக்கியத்தை உன்னிடம் கேட்கிறோம்!!! நரகிலிருந்து பாதுகாப்பு கேட்கிறோம்!

யா அல்லாஹ்! நாங்கள் நற்காரியங்கள் புரிவதற்கு உதவி செய்வாயாக!! கீழ்த்தரமான செயல்களை நாங்கள் விடுவதற்கும் எங்களுக்கு அருள் புரிவாயாக!!! இறைநம்பிக்கையை எங்களுக்கு பிரியம் உள்ளதாக ஆக்கிவைப்பாயாக!!! மேலும் அதனை எங்கள் உள்ளங்களில் அலங்காரமாக வைப்பாயாக!!! இறைவனுக்கு நன்றி மறப்பதையும், பாவங்கள் செய்வதையும், தவறுகள் செய்வதையும் எங்களுக்கு வெறுப்பிற்குரியதாக்கி வைப்பாயாக!! எங்கள் இறைவா! நாங்கள் உன்னிடம் நேர்வழியையும், இறையச்சத்தையும், கற்பையும், போதுமென்ற மனதையும் கேட்கிறோம்.

யா அல்லாஹ்! எங்களுக்கு உண்மையை உண்மையாகவே காட்டுவாயாக! அதனை பின்பற்றும் பாக்கியத்தையும் தருவாயாக!!! தீமையை தீமையாக காட்டுவாயாக! அதனை விட்டு நாங்கள் தவிர்ந்து விடுவதற்கும் நீ உதவி புரிவாயாக!!! எங்கள் மனைவி மக்களுக்கு நீ பரக்கத்து செய்வாயாக!!!

யா அல்லாஹ்! நிச்சயமாக நாங்கள் உன்னிடம் பலன்தரக்கூடிய கல்வியை கேட்கிறோம், மேலும் அஞ்சி நடக்கும் உள்ளத்தையும், எப்போது திக்ர் செய்யும் நாவையும், விசாலமான உயர்தரமான ரிஸ்கையும், ஏற்றுக் கொள்ளப்படக்கூடிய நல் அமல்களையும், உடலில் ஆரோக்கியத்தையும், ஆயுட்காலத்திலும் குழந்தை செல்வத்திலும் பரக்கத்தையும், நாங்கள் உன்னிடம் மன்றாடி கேட்கிறோம்.

யா அல்லாஹ்! எங்களுக்கு பலன் தரக்கூடியவற்றை எங்களுக்கு கற்றுத் தருவாயாக, நீ கற்று தந்ததை எங்களுக்கு பலனுள்ளதாக ஆக்கி வைப்பாயாக, எங்களுக்கு அறிவு ஞானத்தை அதிகப் படுத்துவாயாக! யா அல்லாஹ்! எங்கள் உள்ளங்களுக்கு இறை அச்சத்தை தருவாயாக, மேலும் அதை நீ தூய்மைப் படுத்துவாயாக நீயே அதனை தூய்மைப் படுத்துவதில் சிறந்தவனாக இருக்கிறாய்!

யா அல்லாஹ்! நீயே அதற்கு பொறுப்பாளனாகவும், எஜமானனாகவும் இருக்கிறாய், எங்கள் அனைத்து காரியங்களின் இறுதி முடிவை அழகாக்கி வைப்பாயாக!

யா அல்லாஹ்! எங்கள் எண்ணங்களை சீர்படுத்துவாயாக, எங்கள் மனைவிமார்களிலும், சந்ததியிலும் நீ எங்களுக்கு பரக்கத்து செய்வாயாக, மேலும் அவர்களை எங்களுக்கு கண் குளிர்ச்சியாக ஆக்குவாயாக! எங்கள் நண்பர்களுக்கு உதவி புரிவாயாக! எங்கள் அந்தஸ்துகளை உயர்த்தி விடுவாயாக, எங்கள் நன்மைகளை அதிகப் படுத்துவாயாக, எங்கள் பாவங்களை எங்களை விட்டும் அகற்றிடுவாயாக! (முடிவில்) நல்லோர்களுடன் எங்களை மரணிக்கும்படிச் செய்வாயாக!

யா அல்லாஹ்! எங்கள் அனைத்து பாவத்தையும் மன்னித்துவிடுவாயாக, எங்கள் அனைத்து கவலைகளையும் போக்கி விடுவாயாக, கடன்களை நிவர்த்தி செய்துவிடுவாயாக,

நோயாளிகளை குணப்படுத்திவிடுவாயாக, தேவைகளை மேன்மையாக்கி விடுவாயாக மேலும் நிறைவேற்றி விடுவாயாக. அகிலத்தார் யாவரையும் படைத்து வளர்த்து பக்குவப்படுத்தும் நாயனே! எங்கள் இறைவனே! எங்களுக்கு நீ இம்மையிலும் நன்மை அளிப்பாயாக! மறுமையிலும் நன்மையளிப்பாயாக! (நரக) நெருப்பின் வேதனையிலிருந்தும் எங்களை நீ பாதுகாப்பாயாக!

யா அல்லாஹ்! அமீரக தேசத்தின் எங்கள் தலைவர், எங்கள் காரியங்களின் மன்னர் ஷைகு கலீபாவையும் மற்றும் அவரது பிரதிநிதியையும், நீ நேசித்தவாறு பொருந்திக்கொண்டவாறு உதவி புரிவாயாக! மேலும் அவரது சகோதரர்களை அமீரகத்தின் நடுவர்களாக நிலைப்படுத்துவாயாக !! உயிரோடு உள்ள மற்றும் மரணித்த முஸ்லிமான ஆண் பெண் அனைவருக்கும் நீ மன்னிப்பை வழங்கிடுவாயாக!!!

யா அல்லாஹ்! ஷைகுஜாயிது, ஷைகு மக்தூம், உனது கிருபையில் வந்தடைந்த அமீரகத்தின் மன்னர்களாகிய இவர்களது சகோதரர்கள், ஆகிய அனைவருக்கும் உனது கிருபையை பொழிவாயாக!!!

யா அல்லாஹ்! இந்த பள்ளிவாசலை கட்டியவருக்கும், அவருடைய பெற்றோர்களுக்கும், இந்த பள்ளியில் நல்வணக்கம் புரியும் அனைவருக்கும் நீ மன்னிப்பையும், நற்கூலியையும் வழங்குவாயாக! அல்லாஹ்வுடைய பெயர் சொல்லப்படுவதற்காக பள்ளிவாசல் கட்டும் அனைவருக்கும் யா அல்லாஹ் நீ உனது மன்னிப்பை வழங்குவாயாக!

யா அல்லாஹ் எங்களுடைய சமூகத்தை அருள்நிறைந்த சமூகமாக ஆக்கி வைப்பாயாக! பாவகாரியங்களை செய்யாமல் எங்கள் சமூகத்தை நீ பாதுகாத்து விடுவாயாக! துற்பாக்கியவனாகவோ, நன்மையான காரியங்களை செய்யாதவனாகவோ எங்களில் யாரையும் நீ ஆக்கி விடாதே!!

யா அல்லாஹ் ! இந்த அமீரகத்திலும் அனைத்து இஸ்லாமிய நாடுகளிலும் அமைதியையும் பாதுகாப்பையும் நிலை படுத்துவாயாக !!

மகத்தான அல்லாஹ்வை நினைவு கூறுங்கள், அவன் உங்களை நினைவு கூறுகிறான், மேலும் அவன் நமக்கு செய்த நிஃமத்களுக்காக அவனுக்கு நன்றி செலுத்துங்கள், அவன் அதனை உங்களுக்கு மேலும் அதிகப்படுத்துவான். தொழுகையை நிலைநாட்டுங்கள். ஏனென்றால், நிச்சயமாகத் தொழுகை மானக்கேடான காரியங்களிலிருந்தும். பாவங்களிலிருந்தும் (மனிதனை) விலக்கிவிடும். அல்லாஹ்வை (மறக்காது நினைவில் வைத்து, அவனை) திக்ரு செய்து வருவது மிகமிகப் பெரிய காரியம். நீங்கள் செய்பவைகளை அல்லாஹ் நன்கறிவான். (ஆதலால், இவைகளுக்குரிய கூலியை நீங்கள் அடைந்தே தீருவீர்கள்).